பக்கங்கள்: 08

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2056 ஆனி 31 செவ்வாய்க்கிழமை 15.07.2025 கதிர் 248

இ னி
இ து
ரகசியம்
அல்ல!



அரசுத் தலைவர் அனுரகுமார திசநாயக்கவுக்கு தொடர்ந்து ‘ஆப்பு‘ தயாராகிக் கொண்டே இருக்கிறது. இப்போது அவரும் அவர் தலைமையிலான ☞ 2

### மீனவர் பிரச்சினை குறித்து

## அமைச்சர் சந்திரசேகரனுடன் இந்திய தூதர் சந்தித்து பேச்சு

கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் சந்திரசேகரனுக்கும் இலங்கைக்கான இந்திய உயர்ஆணையர் சந்தோஷ் ஜாவுக்கும் இடையிலான முக்கிய சந்திப்பு நேற்று கடற்றொழில் அமைச்சில் நடைபெற்றது.

இச்சந்திப்பில் மீனவர் நலன், கடல்வள பாதுகாப்பு, கடற்றொழில் துறை அபிவிருத்தி மற்றும் இருதரப்பு ஒத்துழைப்புக்கள் குறித்து விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

வடக்கு மீனவர்கள் கடந்த மூன்று தசாப்த காலப் போருக்குப் பின்னர் பெரும் பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் மீன்பிடித்தொழிலை மேற்கொண்டு வருகின்றனர் எனவும், அவர்களின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் சந்திரசேகரன் இந்தச் சந்திப்பில் சுட்டிக்காட்டினார்.

தமிழ்நாட்டு மீனவர்களின் சட்டவிரோத இழுவை மடி (Bottom trawling) மீன்பிடிப் படகுகளால் கடல்வளம் பெரிதும் பாதிக்கப்படுவதால், அதைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறும் அமைச்சர் உயராணையரிடம் கேட்டுக்கொண்டார்.

இதற்குப் பதிலளித்த இந்திய உயராணையர் சந்தோஷ் ஜா, இழுவை மடி மீன்பிடி முறை தமிழ்நாட்டிலும் ☞ 2

## அரச சேவையில் யாரை இணைப்பதென திருச்சபை எப்படித் தீர்மானிக்க முடியும்?

### சாகர காரியவசம் கேள்வி

பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையின் வலியுறுத்தலுக்கமைவாகவே ரவி செனவிரத்ன, சானி அபேசேகர ஆகியோர் மீண்டும் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டனர் என்று அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவிப்பதன் உண்மையை பேராயர் வெளிப்படுத்தவேண்டும். அரச சேவையில் யாரை இணைப்பது என்று கத்தோலிக்கச் சபை எவ்வாறு தீர்மானிக்க முடியும்? என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொருளாதார மீட்சிக்குரிய புதிய திட்டங்கள் ஏதும் இல்லாத நிலையில் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடன் பெறுவதை மாத்திரம் பிரதான பொருளாதார கொள்கையாக ஆளும்தரப்பு கொண்டுள்ளது.

பரிசோதனையின்றி விடுவிக்கப்பட்ட 323 கொள்கலன்கள் தொடர்பில் ஆளும்தரப்பு உண்மையை மூடிமறைக்கவே முயற்சிக்கிறது. அத்துடன் அரச அதிகாரிகளை குற்றவாளிக்கூண்டில் ☞ 2

## போதைப் பொருள் குற்றங்களில் 1 லட்சம் பேர் இதுவரை கைது

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் போதைப்பொருள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்புகள் மற்றும் தேடுதல் நடவடிக்கைகளில் ஒரு இலட்சத்துக்கும் அதிகமானோர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளாரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான உதயகுமார வுட்லர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த மூன்று மாதங்களில் போதைப்பொருள் ☞ 2

# வாக்குறுதிகளை நிறைவேற்றக்கூடிய வல்லமை ஆளும்தரப்பிடம் இல்லை

### பொது ஜன பெரமுன குற்றச்சாட்டு

உழைக்கும்போது செலுத்தும் வரியை குறைப்பதற்குரிய சாதகமான சூழலை முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஏற்படுத்திக் கொடுத்தார். இந்த சாதகமான தன்மையை பயன்படுத்தி அரசுத் தலைவர் அநுரகுமார திசாநாயக்க உழைக்கும்போது செலுத்தும் வரியை குறைத்தார். மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றும் திறன் மற்றும் இயலுமை ஆளும்தரப்புக்கு கிடையாது என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைக் குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

2024ஆம் ஆண்டு அரசுத் தலைவர் தேர்தலின்போது அரசுத் தலைவர் அநுரகுமார திசாநாயக்க நாட்டு மக்களுக்கு வழங்கிய 22 வாக்குறுதிகளில் ஒரு வாக்குறுதி மாத்திரமே கடந்த 9 மாதக் காலப்பகுதியில் நிறைவேற்றப்பட்டுள்ளதாக வெரிடே ஆய்வு நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

அரசுத் தலைவர் அநுர குமார திசாநாயக்க உழைக்கும் போது செலுத்தும் வரியை மாத்திரமே வழங்கிய வாக்குறுதிகளில் நிறைவேற்றியுள்ளார்.

உழைக்கும் போது செலுத்தும் வரி தொடர்பில் முன்னாள் அரசுத் தலைவரான ரணில் விக்கிரமசிங்க 2024ஆம் ஆண்டு காலப்பகுதியில் உரிய நடவடிக்கைகளை எடுத்திருந்தார். வரியை குறைத்து அதனை முகாமைத்துவம் செய்வதற்கு தேவையான மானியத்தையும் ஒதுக்கியிருந்தார். இந்தச் சாதகமான தன்மையை பயன்படுத்தி அரசுத் தலைவர் அநுர குமார ☞ 2

## சர்வதேச தளங்களில் ஆதரவு இலங்கைக்கு ஈரான் உறுதி

பொருளாதார அபிவிருத்தி மற்றும் சர்வதேச தளங்களில் இலங்கைக்கு ஆதரவு வழங்குவது தொடர்பான ஈரானின் உறுதிப்பாட்டை வலியுறுத்திய ஈரான் இஸ்லாமியக் குடியரசின் இலங்கைக்கான தூதுவர் கலாநிதி அலிரெசா டெல்கோஷ், மீள உருவாக்கப்பட்ட நட்புறவுச்சங்கம் வலுவான நாடாளுமன்ற ஒத்துழைப்பு மற்றும் மக்களுக்கிடையிலான தொடர்புகளை வளர்க்கும் என ஈரான் தூதுவர் நம்பிக்கை வெளியிட்டார்.

இலங்கை - ஈரான் நாடாளுமன்ற நட்புறவுச்சங்கத்தை மீள ஸ்தாபிப்பதற்கான கூட்டம் சபாநாயகர் வைத்தியர் ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் அண்மையில் நாடாளுமன்றத்தில் நடைபெற்றது. இந்தச் சங்கத்தின் தலைவராக சுற்றாடல் அமைச்சர் தம்மிக பட்டபெந்தி தெரிவு செய்யப்பட்டார். ஈரான் இஸ்லாமியக் குடியரசின் இலங்கைக்கான தூதுவர் கலாநிதி அலிரெசா டெல்கோஷ் இந்நிகழ்வில் விருந்தினராகக் கலந்துகொண்டார். இங்கு உரையாற்றும்போதே தூதுவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அத்துடன், பிரதி சபாநாயகர் வைத்தியர் ரிஸ்வி சாலி, அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர உள்ளிட்டோரும் இதில் கலந்துகொண்டனர். இதன்போது கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் நஜித் இந்திக்க இலங்கை ☞ 2

## ஆளும்தரப்பு சரியாகச் செயற்பட்டிருந்தால் அமெ. வரியை மேலும் குறைத்திருக்கலாம்

### ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

ஆளும்தரப்பு இராஜதந்திர ரீதியில் சரியான முறையில் செயற்பட்டிருந்தால், அமெரிக்காவின் தீர்வை வரியை இந்தியாவுக்கு வழங்கப்பட்டிருக்கும் அளவுக்கு குறைத்துக்கொள்ள முடிந்திருக்கும். அதேநேரம் தற்போது 30 சதவீதத்துக்கு குறைத்துக்கொண்டிருப்பதன் மூலம் மகிழ்ச்சியடைய முடியுமா என்பதை எமக்கு போட்டியாக இருக்கும் நாடுகளுடன் சந்தை நிலவரத்தின் பிரகாரமே தீர்மானிக்க முடியுமென ஐக்கிய மக்கள் சக்தி தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி கட்சி காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார்.

அமெரிக்க ☞ 2

## மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் பலவற்றை ஆளும்தரப்பு மீறியுள்ளது

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் குற்றச்சாட்டு

தேர்தல் காலத்தில் நாட்டு மக்களுக்கு வழங்கிய பல வாக்குறுதிகளை இந்த ஆளும்தரப்பு மீறியுள்ளது என்பது விசேட கணக்கெடுப்பின் ஊடாக தெரியவந்துள்ளது. நாட்டில் சட்டம் ஒழுங்கை வலுப்படுத்துவோம் என இந்த ஆளும்தரப்பு தெளிவான வாக்குறுதியை வழங்கியிருந்தது.

நாட்டு மக்களினது வாழும் உரிமையைப் பாதுகாப்பது நாட்டின் முதன்மையான முன்னுரிமைகளில் ☞ 2

## மக்கள் விருப்புக்கு எதிராக செயற்படுகிறது ஆளும்தரப்பு

தற்போதைய ஆளும்தரப்பு மக்களின் விருப்பங்களுக்கு எதிராக செயல்படுவதாக சர்வஜன அதிகாரத்தின் தலைவரும் தொழில்முனைவோருமான திலித் ஜயவீர விமர்சித்துள்ளார்.

செய்தியாளர்கள் சந்திப்பில் நேற்றுக் கருத்து தெரிவித்த அவர், ஆளும்தரப்பின் வரி விதிப்பு மற்றும் செயல்பாடுகள் தொடர்பாக ஆட்சிக்கு வருவதற்கு முன் வெளியிடப்பட்ட அறிக்கைகள் கேள்விக்குரியவை என சுட்டிக்காட்டினார்.

திலித் ஜயவீர மேலும் கூறுகையில், ’மக்கள் எதிர்பார்த்த அனைத்தையும் ஆளும்தரப்பு உதைத்துவிட்டது என்பது தெளிவாகிறது. அரசுத்தலைவர் வரி இளவரசர் என முத்திரை ☞ 3

## இனி இது .....

ஆளும்தரப்பும் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை எந்த அளவிற்கு நிறைவேற்றியுள்ளார் என்பதை அளவிடும் 'அனுர மீற்றர்' என்ற தொகுப்பை வெரிடே ரிசர்ச் நேற்று தொடங்கியுள்ளது.

அனுரகுமார திசாநாயக்க அரசுத் தலைவர் தேர்தலின் போது அளித்த 22 முக்கிய வாக்குறுதிகளின் முன்னேற்றத்தை 'அனுர மீற்றர்' அளவிடும். மந்திரி.எல்கே தளத்தை அணுகுவதன் மூலம் 'அனுர மீற்றர்' ஐ அணுகலாம் என்று வெரிடே ரிசர்ச் தெரிவித்துள்ளது.

'அனுர மீற்றர்' க்கான தகவல்கள் மூன்று முக்கிய ஆதாரங்களில் இருந்து சேகரிக்கப்படும் என்றும் வெரிடே ரிசர்ச் தெரிவித்துள்ளது. அந்த மீற்றரின் தற்போதைய வாசிப்பின்படி, அநுர வழங்கிய வாக்குறுதிகளில் ஒன்றேயொன்று மட்டும்தான் கடந்த 9 மாதங்களில் நிறைவேற்றப்பட்டுள்ளது. மேலும் 8 வாக்குறுதிகள் பகுதியளவில் நிறைவேற்றப்பட்டுள்ளன, இன்னும் முழுமையாகவில்லை. 3 வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

மீதி 10 வாக்குறுதிகள் தொடர்பில் எந்த நடவடிக்கையும் இல்லை. அவற்றில் முக்கியமானவைதான் இங்கு தமிழர்களால் அதிகம் கவனிக்கப்படவேண்டியவை. அரசியல் கைதிகளின் விடுதலை, நிறைவேற்று அதிகார அரசுத் தலைவர் முறையை ஒழித்தல், புதிய அரசமைப்பு உருவாக்கம், வடக்கு கிழக்கு உள்ளிட்ட இலங்கையில் காணாமற்போனவர்கள் தொடர்பான விசாரணைகள், ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பான விசாரணை அறிக்கையின் அடிப்படையில் அரசியல்வாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகள், இனவாதம் மற்றும் மதவாத்தின் அடிப்படையிலான வன்முறைகளுக்கு எதிரான விசாரணைகளை மேற்கொள்ளும் அதிகாரத்தை உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவிற்கு வழங்குதல் ஆகிய 6 வாக்குறுதிகளும் இன்னும் அ-நுர அரசால் தொட்டுக்கூடப் பார்க்கப்படவில்லை. இதில் மாகாண சபைத் தேர்தல் தொடர்பாக அவர் வழங்கிய வாக்குறுதி வெரிடே ரிசர்ச் நிறுவனத்தால் ஒரு வாக்குறுதியாகவே சேர்க்கப்படவில்லை.

எஞ்சியவற்றில் 3 வாக்குறுதிகள் நிதி மோசடிகள் தொடர்பில் வழங்கப்பட்டவை. மற்றையது நாடாளுமன்ற உறுப்பினர்கள் அல்லது அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் நேரடியாகவோ மறைமுகமாகவோ வர்த்தகம் மற்றும் ஒப்பந்தங்களில் ஈடுபடுவதைத் தடுப்பது. இறுதி வாக்குறுதி, சூறையாடப்பட்ட அரச சொத்துக்களை மீட்பதற்கான அரச நிறுவனத்தை தொடங்குவது தொடர்பானது.

ஆக மொத்தத்தில் தமிழர்களோடு தொடர்புடைய விவகாரங்களில்தான் அநுர ஆட்சி இதுவரையில் எந்தவித நடவடிக்கைகளையும் தொடங்காமலேயே இருக்கின்றது. இந்த நாட்டில் எல்லோரும் சமம் என்று கூறிக்கொண்டு வந்தவர்களை இன்னும் இன்னும் அம்பலப்படுத்துவதில் இந்த மீற்றர் வெகு சிறப்பாகப் பணியாற்றும் என்று எதிர்பார்க்கலாம்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## வாக்குறுதிகளை....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

21 வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கு அரசுத் தலைவர் அநுர குமார திசாநாயக்கவிடமோ அல்லது ஆளும் தரப்பிடமோ எவ்வித திட்டங்களும் கிடையாது.

பொருளாதார மீட்சிக்குரிய புதிய திட்டங்கள் ஏதும் இல்லாத நிலையில் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடன் பெறுவதை மாத்திரம் பிரதான பொருளாதார கொள்கையாக ஆளும்தரப்பு கொண்டுள்ளது என்றார்.

## சர்வதேச....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈரான் நாடாளுமன்ற நட்புறவு சங்கத்தின் செயலாளராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

இங்கு உரையாற்றிய சபாநாயகர், இலங்கை மற்றும் ஈரானுக்கிடையிலான நீண்டகால உறவுகளை எடுத்துக்கட்டியதுடன், இரு தரப்பு ஒத்துழைப்புக்களை மேலும் வலுப்படுத்துவதன் முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டினார். இலங்கையின் அபிவிருத்தி மற்றும் பொருளாதாரத்தின் பிரதான பங்காளியாக ஈரான் இருப்பதாகவும்இ குறிப்பாக உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தித் திட்டத்தின் பிரதான நிதி ஆதரவாளராக ஈரான் இருந்து வருவதாகத் தெரிவித்தார்.

இலங்கை தேயிலை ஏற்றுமதியில் குறிப்பிடத்தக்க ஏற்றுமதி செய்யப்படும் இடமாக ஈரான் இருப்பதாகத் தெரிவித்த அவர், சர்வதேசத் தளங்களில் இலங்கைக்கு ஈரான் வழங்கிவரும் தொடர்ச்சியான ஆதரவிற்கு நன்றி தெரிவித்தார். அத்துடன், மீள உருவாக்கப்பட்ட நாடாளுமன்ற நட்புறவுச் சங்கம் நாடாளுமன்றங்களுக்கிடையிலான தொடர்புகளை வலுப்படுத்தும் எனவும், வர்த்தகம், பொருளாதாரம் மற்றும் கலாசாரத் துறைகளில் ஒத்துழைப்பை அதிகரிக்கும் எனவும் சபாநாயகர் நம்பிக்கை வெளியிட்டார்.

நட்புறவுச்சங்கத்தின் புதிய உறுப்பினர்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்த ஈரான் நாட்டின் இலங்கைக்கான தூதுவர் (கலாநிதி) அலிரெசா டெல்கோஷ், ஈரான் மக்களிடையே இலங்கை விசேட கௌரவத்தைப் பெற்றுள்ளதாகத் தெரிவித்தார். பொருளாதார அபிவிருத்தி மற்றும் சர்வதேச தளங்களில் இலங்கைக்கு ஆதரவு வழங்குவது தொடர்பான ஈரானின் உறுதிப்பாட்டை அவர் மீண்டும் வலியுறுத்தினார்.

மீள உருவாக்கப்பட்ட நட்புறவுச்சங்கம் வலுவான நாடாளுமன்ற ஒத்துழைப்பு மற்றும் மக்களுக்கிடையிலான தொடர்புகளை வளர்க்கும் என ஈரான் தூதுவர் நம்பிக்கை வெளியிட்டார்.

அத்துடன், விவசாயம், எண்ணெய் சுத்திகரிப்பு, கலை மற்றும் கலாசார பரிமாற்றம் போன்ற துறைகளில் ஒத்துழைப்புக்களை விரிவுபடுத்துவதற்கான சந்தர்ப்பங்களையும் அவர் எடுத்துக்காட்டினார். இரு நாடுகளுக்கும் இடையிலான உறவை மேலும் வலுப்படுத்தும் நோக்கில், ஈரானுக்கு பயணம் மேற்கொள்ளுமாறு சபாநாயகருக்கும் நட்புறவுச் சங்கத்தின்

உறுப்பினர்களுக்கும் அவர் அழைப்பு விடுத்தார்.

நட்புறவுச்சங்கத்தின் தலைவராக தன்னைத் தேர்ந்தெடுத்தமை தொடர்பில் நன்றி தெரிவித்த அமைச்சர் வைத்தியர் தம்மிக பட்டபெந்திஇ இலங்கைக்கும் ஈரானுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவதற்கான தனது உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்தினார். அத்துடன், நாடாளுமன்ற இராஜதந்திரத்தை மேம்படுத்துவதற்கு ஆதரவளிப்பது தொடர்பில் அவர் சபாநாயகருக்கு தனது நன்றியைத் தெரிவித்தார்.

நன்றியுரையாற்றிய சங்கத்தின் செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் (வைத்தியர்) நஜித் இந்திக்க புதிய உறுப்பினர்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்ததுடன், இலங்கைக்கு ஈரான் வழங்கும் தொடர்ச்சியான ஆதரவுக்கு நன்றி தெரிவித்தார். அத்துடன், நட்புறவுச்சங்கத்தின் குறிக்கோளை அடைவதற்கு ஏனைய உறுப்பினர்களுடன் இணைந்து பணியாற்றுவதற்கு அர்பணிப்பதாகத் தெரிவித்தார்.

## அரச சேவையில்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறுத்துவதற்கும் முயற்சிக்கிறது. இந்தக் கொள்கலன்களில் வெடிபொருட்கள் அல்லது ஆயுதங்கள் இருந்ததாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளுக்கு இதுவரையில் பதில் கிடைக்கவில்லை.

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்கள் பற்றி தற்போது புதிய விடயங்கள் குறிப்பிடப்படுகின்றன. இந்து மதத்தை சார்ந்த பிள்ளையான் சிறையில் இருந்தவாறு முஸ்லிம் இளைஞர்களைத் தூண்டிவிட்டு பௌத்த சிங்கள தலைவரை ஆட்சிக்கு கொண்டு வர குண்டுத்தாக்குதலை நடத்த திட்டமிட்டார் என்று குறிப்பிடப்படுகிறது. தேசிய மக்கள் சக்தியின் தேசிய பட்டியல் பெயர் குறிப்பிடப்பட்டிருந்த இப்ராஹிமின் இரண்டு புதல்வர்களும் தற்கொலை குண்டுத்தாக்குதலை நடத்தினார்கள் என்பதை ஆளும்தரப்பு மறந்து விட்டது.

கோட்டபய ராஜபக்சவை ஆட்சிக்கு கொண்டு வரவே குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக அமைச்சர் பிமல் ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார். அமைச்சர் பிமல் ரத்நாயக்க சுய சிந்தனையில் இவ்வாறு பேசுகிறாரா, அல்லது குறுகிய அரசியல் நோக்கத்துக்காக இவ்வாறு உளறுகிறாரா என்பதை அறிய முடியவில்லை.

2018 ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சிமன்றத் அதிகாரசபை தேர்தலில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன அமோக வெற்றிப்பெற்றது. 2019 ஆம் ஆண்டு அரசுத் தலைவர் தேர்தலில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவுக்கு வெற்றி உறுதி என்று மக்கள் தமது ஆணை ஊடாக உறுதிப்படுத்தியிருந்தார்கள். இவ்வாறான நிலையில் தேர்தல் வெற்றிக்காக குண்டுத் தாக்குதலை நடத்தவேண்டிய அவசியம் ராஜபக்சக்களுக்கு இருக்கவில்லை.

அரசுத் தலைவர் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் பரப்புரைகளில் ஈடுபட்ட ரவி செனவிரத்ன மற்றும் சானி அபேசேகர ஆகியோர் மக்கள் விடுதலை முன்னணியின் தலைமை காரியாலயத்தில் இருந்து ஊடக சந்திப்புக்களை நடத்தினார்கள். தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வருவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்டார்கள்.

ரவி செனவிரத்ன மற்றும் சானி அபேசேகர ஆகியோரை மீண்டும் சேவையில் இணைத்துக் கொள்ளுமாறு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் வலியுறுத்தினார் எனவும், அவரது கோரிக்கைக்கு அமைவாகவே இவ்விருவரும் மீண்டும் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டதாகவும் அமைச்சர் பிமல் ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார்.

இதன் உண்மைத்தன்மையை பேராயர் வெளிப்படுத்த வேண்டும். யாரை அரச சேவையில் இணைத்துக் கொள்ள வேண்டும் என்பதை கத்தோலிக்க சபை எவ்வாறு தீர்மானிக்க முடியும்? இந்த ஆளும்தரப்பின் போலியான வாக்குறுதிகளுக்கு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை ஏமாற்றமடையக் கூடாது என்று அவரிடம் கேட்டுக்கொள்கிறோம் என்றார்.

## அமைச்சர்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தடை செய்யப்பட்டுள்ளதாகவும், தற்போது அங்குள்ள மீனவர்கள் ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபட ஊக்குவிக்கப்பட்டு வருகின்றனர் என்றும் தெரிவித்தார்.

இங்கே கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்படும் தமிழ்நாட்டு மீனவர்களும் மிகக் குறைந்த நாட் கூலிக்கு வேலை செய்யும் வறிய மக்கள் என்பதை வலியுறுத்திய அவர், கலாசார ரீதியாகவும் ஒரே மொழி பேசக்கூடியவர்கள் என்ற அடிப்படையிலும் இருதரப்பு மீனவர்களுடனான கலந்துரையாடல்களை ஊக்குவிப்பதன் மூலம் புரிதலை ஏற்படுத்தவும் பிரச்சினைகளுக்கான தீர்வுகளைக் காண்பதற்கான அடித்தளத்தை உருவாக்கவும் முடியும் என்றும் தெரிவித்தார்.

கடந்த காலங்களிலும் தமிழ்நாட்டு மீனவர்கள் குழு இலங்கை வந்து சென்றதாகவும், தான் தமிழ்நாடு சென்றபோது அவர்களைச் சந்தித்து சகோதரத்துவத்துடன் சுமூகமான கலந்துரையாடல்களை மேற்கொண்டார் எனவும் அமைச்சர் சந்திரசேகரன் நினைவுகூர்ந்தார். உயராணையரின் கோரிக்கையை ஏற்று, வருங்காலத்திலும் இருநாட்டு மீனவ சமூகங்களுக்கிடையில் சந்திப்புக்களையும் கலந்துரையாடல்களையும் அதிகரித்து புரிதலை வலுப்படுத்தவும் இணக்கம் தெரிவித்தார்.

கடற்றொழில் துறை அபிவிருத்தி குறித்துப் பேசிய அமைச்சர் சந்திரசேகரன், வடக்கு மற்றும் கிழக்கில் மீன்பிடித் துறைமுகங்கள் இல்லை எனவும், பேசாலை, குருநகர் மற்றும் பருத்தித்துறை போன்ற இடங்களில் அதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாகவும் தெரிவித்தார். ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபடுவதற்கான படகு வசதிகளும், களஞ்சிய வசதிகளும் வடக்கு மீனவர்களிடம் இல்லை என்பதையும், ஒன்றிரண்டு சிறிய படகுத்துறைகளை அமைக்க சர்வதேச உதவிகளை எதிர்பார்ப்பதாகவும் கூறினார்.

மீனவத்துறை சார்ந்த அபிவிருத்திகளுக்கு ஒத்துழைப்பு நல்குவது குறித்துச் சாதகமான பதிலை வழங்கிய இந்திய உயராணையர், விரைவாக இந்திய உதவியில் பருத்தித்துறை மீனவத் துறைமுகப் பணிகளை ஆரம்பிப்பது குறித்த ஆர்வத்தை வெளிப்படுத்தினார். ஆளும்தரப்புக்குச் சொந்தமான படகு உற்பத்தி நிறுவனமான சீனோர் நிறுவனத்தின் கட்டட நிர்மாணப் பணிகளுக்கும் இந்தியா உதவிகளை வழங்க எதிர்பார்த்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

மேலும், இந்திய உதவியில் நிர்மாணிக்கப்பட்ட கலாசார மத்திய நிலையத்தை ஒரு நம்பிக்கை நிதியத்தின் மூலம் முறையாக முகாமைத்துவம் செய்வது குறித்தும், அச்சுவேலி தொழிற்துறை வலய (ஞூஜ-ற்விமிஷெஷ்ழியி ரீலிஜள) நிர்மாணம் மற்றும் அதற்கு இந்திய முதலீட்டாளர்களின் ஒத்துழைப்புகள் கோரப்பட்டுள்ளது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன், நாகப்பட்டினம் - காங்கேசன்துறை பயணிகள் கப்பல் சேவை போன்று தலைமன்னார் மற்றும் ராமேஸ்வரம் இடையிலான பயணிகள் கப்பல் சேவை ஆரம்பிப்பது குறித்தும் காங்கேசன்துறை துறைமுகத்தை நவீனமயமாக்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் தயாராகிவிட்டதாகவும், விரைவாக சரக்கு சேவைகளை தொடங்குவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்தும் இந்திய உயராணையர் கேட்டறிந்தார்.

தொடர்ச்சியான இந்தியாவின் உதவிகளுக்கும் ஒத்துழைப்புகளுக்கும் நன்றி தெரிவித்த அமைச்சர் சந்திரசேகரன் வரும்காலத்தில் மீனவர் பிரச்சினைகளுக்கான ஆக்கபூர்வமான கலந்துரையாடல்களை மேற்கொண்டு தீர்வுகாண அரசு தயாராக இருப்பதாக வலியுறுத்தினார்.

இச்சந்திப்பில் கொழும்பிலுள்ள இந்திய உயராணையரகத்தின் பிரதி உயராணையர் கலாநிதி சத்யஞ்சல் பாண்டே, முதல் செயலாளர் ராம் பாபு மற்றும் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சின் செயலாளர் கலாநிதி கோலித்த கமல் ஜினதாச ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## மக்களுக்கு...

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்று என்று பொதுமக்களுக்கு வாக்குறுதி வழங்கியிருந்த போதிலும், இன்றளவில், முறையான பொது மக்கள் பாதுகாப்பை வழங்க முடியாததொரு ஆளும்தரப்பே காணப்படுகின்றது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்றுத் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் காட்டுச் சட்டமே தற்போது நடைமுறையில் காணப்படுகின்றது. நாட்டில் சட்டத்தின் ஆட்சி முற்றிலுமாக அழிக்கப்பட்டு, 67 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் ஊடாக 37 உயிர்கள் பலியாகியுள்ளன. தேசிய பாதுகாப்பு குறித்து டியுசன் வகுப்புகளை எடுப்போம் என ஆளும் தரப்பினர் தேர்தல் மேடைகளில் மக்கள் மத்தியில் வீராப்புடன் பிரஸ்தாபித்தனர். ஆனால் இன்று தேசிய பாதுகாப்பும், பொது மக்கள் பாதுகாப்பும் முற்றிலுமாக இல்லாது போயுள்ளன.

மக்களின் உயிரைப் பாதுகாத்துக்கொள்ள முடியாத சூழ்நிலை உருவாகியுள்ளது. எந்நேரத்தில், எந்தக் கட்டத்தில் துப்பாக்கிப் பிரயோகங்கள் மேற்கொள்ளப்பட்டு உயிர்கள் பழிபோகும் என்ற பிரச்சினை எழுந்து காணப்படுகின்றன. சட்டம் ஒழுங்கு மீதான தற்போதைய அடி தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகும். ஆனபடியால் இதை உடனடியாக கட்டுப்படுத்த வேண்டும்.

இந்தப் பொறுப்பிலிருந்து ஆளும்தரப்பு தப்பித்து விட முடியாது. ஒட்டுமொத்த பொதுமக்களும் இந்த தேசிய பாதுகாப்புப் பிரச்சினைக்கு தீர்வை எதிர்பார்த்து நிற்பதால் ஆளும்தரப்பு இந்தப் பிரச்சினையிலிருந்து தப்பிக்க முடியாது.

இந்த கொலை கலாச்சாரத்தைக் கட்டுப்படுத்த வலுவான சட்ட நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். இவ்வாறு உரிய நடவடிக்கை எடுக்காதவிடத்து மக்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படும். இது ஆளும்தரப்பின் தோல்வியை காட்டி நிற்கிறது என தெரிவித்தார்.

## ஆளும்தரப்பு....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசுத் தலைவர் தேர்தலின்போதே வரியை அதிகரிப்பதாக டொனால் ட்ரம் தெரிவித்திருந்தார். அவர் அரசுத் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டபோதே ஆளும்தரப்பு இதுதொடர்பில் கலந்துரையாடி இருக்கவேண்டும். இலங்கை சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்துடன் செயற்பட்டு வருவதால், நாங்கள் திட்டமிட்டு செயற்பட்டிருந்தால் சிறந்த நிவாரணம் ஒன்றை பெற்றுக்கொண்டிருக்கலாம்.

அமெரிக்க அரசுத் தலைவரின் வரி அதிகரிப்பு தொடர்பான அறிவிப்பு விடுக்கப்படுவதற்கு முன்னரே இந்தியா அது தொடர்பில் அமெரிக்காவுடன் கலந்துரையாட ஆரம்பித்திருந்ததாக அந்நாட்டு ஊடகங்களில் செய்தி வெளியிடப்பட்டிருந்தன. ஆனால் எமது ஆளும்தரப்பு இறுதிக்கட்டத்திலே இது தொடர்பான கலந்துரையாடுவதற்குச் சென்றது. அதுவும் அதிகாரிகள் மட்டத்திலே இது இடம்பெற்றது. இதனைவிட உயர் மட்டத்தில் கலந்துரையாட முடிந்திருந்தால் எம்மால் இன்னும் வரி நிவாரணத்தை குறைத்துக்கொண்டிருக்கலாம் என்றே நாங்கள் நினைக்கிறோம்.

அதேநேரம் ஆளும்தரப்பு இராஜதந்திர மட்டத்தில் செயற்பட்டு, எமது நாட்டின் பொருளாதார நிலையை கருத்திற்கொண்டு இந்த கலந்துரையாடலை மேற்கொண்டிருந்தால், இந்தியாவுக்கு வழங்கப்பட்டிருப்பதாக

தொடர்ச்சி 3ம் பக்கம்....

## ஆளும்தரப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்படும் 20 சதவீத அளவுக்காவது எமக்குகுறைத்துக்கொண்டிருக்கலாம். ஆனால் ஆளும்தரப்பு இந்த விடயத்தை பெரிதாக கண்டுகொள்ளாமல், இறுதி நேரத்திலே செயற்பட ஆரம்பித்தது.

வரி அதிகரிப்பு தொடர்பில் அமெரிக்காவின் அறிவிப்பு வந்ததுடன், உடனடியாக ஆளும்தரப்பின் குழுவொன்றை அமெரிக்காவுக்கு அனுப்பி, கலந்துரையாடுமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்திருந்தார். ஆனால் ஆளும்தரப்பு கண்டுகொள்ளவில்லை.

அதேநேரம் தற்போது 44 சதவீதமாக இருந்த இந்த வரியை 30 சதவீதமாக குறைத்துக்கொண்டிருப்பதாகவும் எம்முடன் அமெரிக்க சந்தையில் போட்டியிடக்கூடிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் எமக்கே குறைந்தளவு வரி விதிக்கப்பட்டிருப்பதாக ஆளும்தரப்பு தெரிவிக்கிறது. ஆனால் பங்களாதேஷுக்கு எம்மைவிட 5 சதவீதமே வரி அதிகமாகும். ஆனால் அவர்களின் ஆடை உற்பத்தி செலவு எம்மைவிட குறைவாகும்.

அதனால் அவர்களுக்கு இதனை ஓரளவு சமாலிதுக்கொள்ள முடியுமாகும். அதேபோன்று வியட்நாமுக்கு 20வீத அதிகரிப்பே வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் ஆடை உற்பத்தியில் முன்னணியில் இருக்கும் நாடு. இவ்வாறு இருக்கையில் அமெரிக்க சந்தையில் இந்த நாடுகளுடன் எமக்கு போட்டியிட முடியுமா என்றே நாங்கள் பார்க்க வேண்டும்.

அதனால் ஆளும்தரப்பு தொடர்ந்தும் முயற்சித்து எமது தீர்வை வரடியை 20சதவீதம் வரை குறைத்துக்கொள்ள முடியுமானாலே எமது தொழிற்சாலைகளை பாதுகாத்துக்கொள்ள முடியும். அதேநேரம் இங்கிலாந்து தீர்வை வரி குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. இங்கிலாந்தின் இந்த அறிவிப்பு முழு தெற்காசியாவுக்கும் வழங்கப்பட்டதாகும். அதனால் ஆளும்தரப்பு இதுதொடர்பாகவும் கவனம் செலுத்த வேண்டும் என்றார்.

## மக்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குத்தப்பட்டுள்ளார். முன்பு வரிகள் குறித்து அவர்கள் பேசியது வேறு, இப்போது பேசுவது வேறு. சர்வதேச நாணய நிதியம் பெயரில் விதிக்கப்படும் வரிகள், ரணில் விக்கிரமசிங்க திட்டத்தைப் பின்பற்றி, மக்களின் கோபத்திற்கு ஆளாகியுள்ளது,' என்றார்.

## போதைப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பில் பொலிஸார் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மற்றும் முப்படையினர் மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்புகள் மற்றும் தேடுதல் நடவடிக்கைகளில் 302 கிலோ ஹெரோயின் போதைப்பொருள் 104 கிராம் ஐஸ் போதைப்பொருள் மற்றும் 2641 கிலோ கேரள கஞ்சா உள்ளிட்ட போதை பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன. இதற்கமைய 35442 வழக்குகள் பொலிஸாரால் தொடுக்கப்பட்டுள்ளன.

இதனை விட இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் நாடளாவிய ரீதியில் மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்புகள் மற்றும் தேடுதல் நடவடிக்கைகளில் 922 கிலோ ஹெரோயின் போதைப்பொருள், 1386 கிலோ ஐஸ் போதைப்பொருள், 10,895 கிலோ கேரள கஞ்சா, 22 கிலோ கொக்கைன் போதைப்பொருள், 329 ஹேஷ் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளன. மேலும் ஒரு இலட்சத்து 6 ஆயிரம் பேர் இதன்போது கைது செய்யப்பட்டுள்ளனர் என்றார்.

# ஆளும்தரப்பை விரட்டியடிக்க மக்கள் வீதிக்கு இறங்குவார்கள்

## ஐ.ம. சக்தி தேசிய அமைப்பாளர் நம்பிக்கை

சஜித் பிரேமதாசவின் நற்பெயருக்கு களங்கத்தை ஏற்படுத்துவதற்கும் ஆளும்தரப்புக்கு எதிரான அவரின் குரலை அடக்குவதற்குமே ஆளும்தரப்பு மத்திய கலாசார நிதியத்தில் மோசடி இடம்பெற்றுள்ளதாக தெரிவித்து விசாரிக்க நடவடிக்கை எடுத்துள்ளது. ஆனால் அதற்கு முன்னர் மக்கள் எதிர்கொண்டுள்ள நெருக்கடிகளுக்கு தீர்வுகாண நடவடிக்கை எடுக்காவிட்டால் ஆளும்தரப்பை விரட்டியடிக்க மக்கள் வீதிக்கு இறங்குவார்கள் என ஐக்கிய மக்கள் சக்தி தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி கட்சி காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

மத்திய கலாசார நிதியத்தில் 2017 முதல் 2020 காலப் பகுதியில் மோசடி இடம்பெற்றுள்ளதாக தெரிவித்து ஆளும்தரப்பு அதுதொடர்பில் விசாரணை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளது. ஆளும்தரப்பு தெரிவிக்கும் இந்த காலப்பகுதியில் சஜித் பிரேமதாச அமைச்சராக இருந்தபோது அவருக்கு கீழே மத்திய கலாசார நிதியம் இருந்து வந்தது.

ஆளும்தரப்புக்கு எதிராக சஜித் பிரேமதாச தெரிவித்துவரும் குற்றச்சாட்டுக்கள் மற்றும் ஆளும்தரப்பின் இயலாமை தொடர்பாக தெரிவித்துவரும் விடயங்களால் ஆளும்தரப்புக்குள் பாரிய நெருக்கடி ஏற்பட்டுள்ளது. அதனால் சஜித் பிரேமதாசவின் நற்பெயருக்கு களங்கத்தை ஏற்படுத்தவே இவ்வாறானதொரு நடவடிக்கையை ஆளும்தரப்பு ஆரம்பித்துள்ளது.

மத்திய கலாசார நிதியத்தில் மோசடி இடம்பெற்றுள்ளதாக கடந்த காலங்களிலும் சஜித் பிரேமதாசவுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. குறிப்பாக 2019இல் நாடாளுமன்றத்தில் இது தொடர்பில் சபை ஒத்திவைப்பு வேளை விவாதம் நடத்தி குற்றச்சாட்டுக்கள் தெரிவி க்கப்பட்டபோதும் அதனை உறுதிப்படுத்த முடியாமல் போனது. அதேபோன்று கோப் குழுவிலும் இதுதொடர்பாக கலந்துரையாடப்பட்டது. அப்போதும் சஜித் பிரேமதாசவுக்கு எதி ராக நடவடிக்கை எடுக்க முடியாமல் போனது.

இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு சென்றபோது அதிலும் எந்த பெறுபேறும் கிடைக்கவில்லை. கோட்டாபய ராஜபக்ஷ காலத்தில் விசாரணை குழு அமைத்து இதுதொடர்பில் நடவடிக்கை எடுக்க முற்பட்டபோதும் சஜித் பிரேமதாசவுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு எந்த ஆதாரமும் கிடைக்கவில்லை. இவ்வாறு 5 தடவைகள் இந்த மத்திய கலாசார நிதியம் தொடர்பில் வி சாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அத்துடன் உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதலில் பாதிக்கப்பட்ட கொச்சிக்கடை புனித அந்நேனியார் தேவாலயம், கட்டுவாப்பிடிய புனித செபஸ்த்தியா ஆரலயம் மற்றும் மட்டக்களப்பு சியோன் தேவாலயம் ஆகியவற்றை புனர்நிர்மாணம் செய்வதற்கே சஜித் பிரேமதாச மத்திய கலாசார நிதியத்தில் இருந்து, தேவையான நிதியை பெற்றுக்கொடுத்தார்.

அதேபோன்று பௌத்த விகாரை, இந்து கோயில் மற்றும் முஸ்லிம் பள்ளிவாசல்களின் அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் ஞாயிறு அறநெறி பாடசாலைகளின் கட்டிட புனரமைப்புக்கு நிதி ஒதுக்கீடு செய்திருந்தார். அதனை தவறு என்று யாரும் தெரிவிப்பதில்லை.

எனவே ஆளும்தரப்பு சஜித் பிரேமதாசவுக்கு எதிராக மத்திய கலாசார நிதியம் தொடர்பாக விசாரணை மேற்கொள்வதற்கு முன்னர், மக்கள் எதிர்கொண்டுள்ள நெருக்கடிகளுக்கு தீர்வுகாண நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லாவிட்டால், ஆளும்தரப்பை விரட்டியடிக்க மக்கள் வீதிக்கிறங்குவார்கள் என்றார்.



காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## வாக்குறுதிகள் வெறும் மாயமானா?

இலங்கையின் புதிய அரசுத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட அநுர குமார திசநாயக்கவின் ஆட்சி மக்கள் எதிர்பார்ப்புகளை சந்திக்கத் தொடங்கி 9 மாதங்களாகியுள்ளது. வேட்பாளராக இருந்த காலத்தில் அவர் முன்வைத்த வாக்குறுதிகள், சிறந்த நிர்வாகம், ஊழலற்ற ஆட்சி, பொதுமக்களின் வாழ்க்கைத் தரம் உயர்த்தல் போன்ற முக்கிய இலக்குகளை அடிப்படையாகக் கொண்டிருந்தன. ஆனால், இவைகளின் நிறைவேற்றத்தில் காணப்படும் மந்தநிலை குறித்து 'அநுர மீற்றர்' என்ற பெயரில் வெரிடே ரிசர்ச் நிறுவனம் முன்வைத்திருக்கும் மதிப்பீடு, ஒரு பொது விவாதத்திற்கு வாய்ப்பு அளிக்கிறது.

இந்த 'அநுர மீற்றர்' என்பது, அவரது ஆட்சியில் இதுவரை எத்தனை வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன, எத்தனை செய்யப்படும் நிலையில் உள்ளன, எத்தனை முற்றிலும் புறக்கணிக்கப்பட்டுள்ளன என்பதை தரவுகளின் அடிப்படையில் கண்காணிக்கும் முயற்சியாக உள்ளது. ஜனநாயக ஒழுங்கு முறைமைக்குள் இதுபோன்ற கண்காணிப்புக் கருவிகள் மிகவும் முக்கியமானவை. தேர்தலின்போது அளிக்கப்படும் வாக்குறுதிகள் வெறும் மேடைக் கூச்சல்களாக அல்ல; மக்களுடன் நடைபெற்ற ஒப்பந்தமாக இருக்கவேண்டும் என்பது இந்நூற்றாண்டு அரசியலின் அடிப்படை கோட்பாடாக இருக்கிறது.

இந்த 'அநுர மீற்றர' அடிப்படையில் பார்த்தால் வெறும் 5 சதவீதம் மட்டுமே கடந்த 9 மாதங்களில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இன்னும் 35 சதவீதம் மட்டுமே பகுதியளவில் நிறைவேற்றப்பட்டுள்ளது. தொடங்கப்பட்டுள்ள பணிகளின் சதவீதம் என்பது 14 ஆக உள்ளது. ஆனால் 45 சதவீதமான வாக்குறுதிகள் தொடர்பில் எந்த நடவடிக்கையும் அதாவது முன்முயற்சிகள்கூட இதுவரையில் இல்லை. அப்படி தொடங்காத வாக்குறுதிகளில் பெரும்பாலானவை இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வுகளோடு தொடர்புபட்டவை.

அரசியல் கைதிகளின் விடுதலை, நிறைவேற்று அதிகார அரசுத் தலைவர் முறையை ஒழித்தல், புதிய அரசமைப்பு உருவாக்கம், வடக்கு கிழக்கு உள்ளிட்ட இலங்கையில் காணாமற்போனவர்கள் தொடர்பான விசாரணைகள், ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பான விசாரணை அறிக்கையின் அடிப்படையில் அரசியல்வாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகள், இனவாதம் மற்றும் மதவாத்தின் அடிப்படையிலான வன்முறைகளுக்கு எதிரான விசாரணைகளை மேற்கொள்ளும் அதிகாரத்தை உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவிற்கு வழங்குதல் ஆகிய 6 வாக்குறுதிகளும் இன்னும் அ–நுர அரசால் தொட்டுக்கூடப் பார்க்கப்படவில்லை.

புதிய அரசமைப்பு நிறைவேற்றப்படும் வரையில் மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்படும் என்று அநுர வழங்கிய வாக்குறுதி வெரிடே ரிசர்ச் நிறுவனத்தால் ஒரு வாக்குறுதியாகவே சேர்த்துக்கொள்ளப்படவில்லை என்பது இங்கு கவனத்திற்குரியது.

ஆட்சிக்கு வந்த முதல் ஆறு மாதங்களில் நாடு முழுவதும் காணப்படும் பொருளாதார சிரமங்கள், நாணய பெறுமதியின் வீழ்ச்சி, வேலைவாய்ப்பில் தேக்க நிலை, அடிப்படை நல சேவைகளின் சீர்கேடு போன்றவை அநுர அரசின் வேகத்தைக் குறைத்திருப்பது உண்மைதான். ஆனால், அதற்கான விளக்கங்கள், நாடாளுமன்றத்திலும், ஊடகங்களிலும் தெளிவாக வழங்கப்படவேண்டும். இல்லையெனில், 'மாற்றத்துக்காக வாக்களித்தோம்; ஆனால் மாற்றமே இல்லை' என்ற எண்ணம் பொதுமக்களிடையே வேரூன்றி விடும் அபாயம் உள்ளது.

மாற்றத்தை அளிக்கும் அரசியல்வாதியாகத் தன்னை உருவாக்கிக்கொண்ட அநுரவின் ஆட்சி, தனது ஆரம்பக்காலத்திலேயே நேர்மையான ஆளும்தரப்பை உருவாக்க முடியாதபட்சத்தில், அரசியல் நம்பிக்கையை இழந்துவிடும். மக்கள் வாக்குறுதி நிறைவேற்றக் காத்திருப்பதற்கான பொறுமையுடன் இருக்கின்றனரா என்ற கேள்விக்கு விடை, அவரது நிர்வாகச் செயல்திறனைப் பொறுத்தே அமையும்.

அதிகாரத்தில் இருப்பவர்களுக்கு, செயல்திறன் என்பது பல மாறிலிகள் கொண்ட ஒன்று என்றாலும், அரசியல் மதிப்பீட்டில் அதற்கான அளவுகோலாக வாக்குறுதிகள் மட்டுமே பார்வையிடப்படுகின்றன. அதனால்தான், வெரிடே நிறுவனம் போன்ற அமைப்புகள் மேற்கொள்ளும் கண்காணிப்புகள் முக்கியமான கட்டங்களை நிரூபிக்கின்றன.

இந்நிலையில், அநுர அரசின் பொறுப்பு வெறுமனே 'முந்தைய ஆட்சி செய்த தவறுகளை நாங்கள் திருத்துகிறோம்' என்று கூறுவதிலல்ல; புதிதாக அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதில்தான் இருக்கவேண்டும். அரசியலில் நேர்மை மட்டுமல்ல, நேர்த்தியும் தேவைப்படுகிறது. அதனை மக்களுக்கு நிரூபிக்க வேண்டிய கட்டம்தான் இது.

எனவே, வெரிடே நிறுவனம் முன்வைத்த 'அநுர மீற்றர்' அரசின் கண்களை திறக்கக்கூடிய ஒளிச்சுடராக இருக்க வேண்டும். அதனடிப்படையில், மக்கள் கேட்கும் கேள்விகளுக்கு பதிலளிக்கும் நேர்மையான அரசியல் செயல்பாடுகளை அநுர ஆட்சி விரைவில் காட்டவேண்டும். இல்லையெனில், மாற்றத்தின் ஆசை பொய்யான கனவாக மாறும் அபாயம் உள்ளது.

## இங்கு மனித வள அபிவிருத்தியில் முதலிட சவூதி அரேபியா ஆர்வம்

இலங்கையில் மனித வள அபிவிருத்தியில் முதலீடு செய்வதும், இலங்கையின் கல்வித்துறையின் எதிர்காலத்தை அபிவிருத்தி செய்வதும் முக்கியமானவை என்பதில் சவூதி அரேபியா நம்பிக்கை கொண்டுள்ளதாக இலங்கைக்கான சவூதி அரேபிய தூதுவர் காலித் ஹமூத் அல்கஹ்தானி தெரிவித்தார்.

வயம்ப பல்கலைக்கழக நகரமைப்புத் திட்டத்தின் திறப்பு விழாவில் நேற்றுப் பங்கேற்றமை தொடர்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வயம்ப பல்கலைக்கழக நகரமைப்புத் திட்டத்தின் திறப்பு விழாவில் பங்கேற்பதில் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன்.

இந்த கல்வி மற்றும் வளர்ச்சித் திட்டம், சவூதி அரேபியா மற்றும் இலங்கை ஆகிய இருநாடுகளுக்கும் இடையேயான ஆழமான உறவுகளை பிரதிபலிக்கிறது.

சவூதி அபிவிருத்தி நிதியம், இலங்கை குடியரசில் சுமார் 425 மில்லியன் அமெரிக்க டொலருக்கும் மேற்பட்ட பெறுமதி கொண்ட 15 முக்கிய திட்டங்களுக்கு நிதி அளித்துள்ளது.

இந்த வயம்ப பல்கலைக்கழக திட்டமும் சவூதியின் முக்கிய திட்டங்களில் ஒன்றாகும். இலங்கையில் மனித வள அபிவிருத்தியில் முதலீடு செய்வதும், இலங்கையின் கல்வித்துறையின் எதிர்காலத்தை அபிவிருத்தி செய்வதும் முக்கியமானவை என்பதில் சவூதி அரேபியா கொண்டுள்ள நம்பிக்கையே இந்த திட்டங்களை செயற்படுத்த காரணமாக அமைந்துள்ளன.

பல்கலைக்கழகங்களை கட்டுதல், அபிவிருத்தி செய்தல் என்பது வெறும் கட்டடங்களை நிர்மாணிப்பது மட்டுமல்ல, மாறாக அது ஒரு பிரகாசமான எதிர்காலத்துக்கான அடித்தளமாகவும், மக்களுக்கு இடையேயான புரிதலையும் அறிவையும் இணைக்கும் பாலமாகவும் அமைகிறது.

இந்த திட்டம், எவ்வித உட்புற நோக்கங்களோ அல்லது நிபந்தனைகளோ இல்லாமல், பரஸ்பர மரியாதை மற்றும் ஒத்துழைப்பை அடிப்படையாகக் கொண்ட உண்மையான அபிவிருத்திக் கூட்டுறவுகள் என்னவெல்லாம் சாதிக்கலாம் என்பதற்கான ஒரு முன்னுதாரணமாக உள்ளது.

1975ஆம் ஆண்டில் நிறுவப்பட்டதிலிருந்து, சவூதி அபிவிருத்தி நிதியம், உலகம் முழுவதும் அபிவிருத்தி மற்றும் அமைதிக்காக சேவையாற்றும் சவூதியின் கொள்கையின் அடிப்படையில், 90க்கும் மேற்பட்ட நாடுகளில் நிலைத்த பயனுடைய திட்டங்களை செயற்படுத்த மிகுந்த முயற்சியுடன் செயற்பட்டு வருகிறது.

மேலும், இரு புனித மஸ்ஜித்களின் பாதுகாவலர் மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் அவர்களுக்கும் மற்றும் பிரதமர் மற்றும் பட்டத்து இளவரசர் முஹம்மத் பின் சல்மான் அவர்களுக்கும், மேலும் இந்தத் திட்டத்தின் வெற்றிக்கு பங்களித்த அனைத்து செயற்குழுக்கள், இலங்கையின் கல்வி அமைச்சில் உள்ள எமது நண்பர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

இறுதியாக, வயம்ப பல்கலைக்கழகம் அறிவின் கலங்கரை விளக்கமாகவும் நம்பிக்கையின் இல்லமாகவும் இருப்பதையும், மேலும் செழிப்பான மற்றும் பாதுகாப்பான இலங்கையை கட்டியெழுப்ப உதவும் புதிய தலைமுறைகளை உருவாக்கும் தளமாகவும் அமையும் என நான் எதிர்பார்க்கிறேன் என குறிப்பிட்டுள்ளார்.

## இலங்கை –இந்தோனிய நாடாளுமன்ற நட்புறவுச் சங்கத்தை அமைக்க முயற்சி

இலங்கை - இந்தோனேசிய நாடாளுமன்ற நட்புறவுச் சங்கத்தை விரைவில் அமைப்பது குறித்து இலங்கைக்கான இந்தோனேசியத் தூதுவர் திவி குஸ்டினா டொபிங் (Dewi Gustina Tobing) மற்றும் சபாநாயகர் வைத்தியர் ஜகத் விக்கிரமரத்ன ஆகியோருக்கு இடையிலான சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது.

நாடாளுமன்றத்தில் கடந்த 9ஆம் திகதி இடம்பெற்ற இச்சந்திப்பில் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர, அமைச்சு ஆலோசகரும், இந்தோனேசிய தூதரகத்தின் பிரதித் தூதுவருமான ய்ஷ்வஷ் நுவமிழிஜஷ்லி மற்றும் இந்தோனேசிய தூதுரகத்தின் அமைச்சு ஆலோசகர் Lailal Khairiyah Yuniarti ஆகியோரும் கலந்துகொண்டனர்.

விவசாயம், வர்த்தகம், சுற்றுலா மற்றும் மக்களுக்கு இடையேயான உறவுகள் ஆகிய துறைகளில் இலங்கைக்கும் இந்தோனேசியாவிற்கும் இடையிலான நீண்டகால இருதரப்பு உறவுகளை இச்சந்திப்பில் பாராட்டிய சபாநாயகர், அவற்றை மேலும் வலுப்படுத்துவதன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினார். இங்கு போக்குவரத்துத் துறை பற்றியும் கலந்துரையாடப்பட்டதுடன், இந்தோனேசியாவின் ஜகார்த்தா நகருக்கு அருகில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பனோரமிக் ரயிலை இலங்கையின் போக்குவரத்துத்துறையின் மேம்பாட்டுக்குப் பயன்படுத்தக்கூடியதன் வாய்ப்புக்கள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

அத்துடன், நாட்டில் இயங்கிவரும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான பத்திக் (Batik) தொழில்துறை குறித்த அறிவைப் பரிமாறிக்கொள்ள வேண்டியதன் அவசியம் இருப்பதாக சபாநாயகர் இங்கு குறிப்பிட்டார்.

இந்தோனேசிய பாரம்பரிய இசைக்கருவியான 'Angklung' சமூக நல்லிணக்கம் மற்றும் சமூக சகவாழ்வின் கருத்தை எவ்வாறு பிரதிபலிக்கிறது என்பது குறித்தும் சபாநாயகர் கருத்துத் தெரிவித்தார்.

தற்போதைய அரசாங்கம் எவ்வாறு மக்களுக்கு பொறுப்புக்கூறக்கூடியதாகவும், ஊழல் மற்றும் முறைகேடுகளுக்கு எதிராக செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது என்பது பற்றியும் சபாநாயகர் எடுத்துக் கூறினார். அத்துடன், தற்போது முதலீட்டுத் திட்டங்களை மேற்கொள்வதற்கு இலங்கை பொருத்தமான நிலையில் உள்ளது என்பதையும் அவர் வலியுறுத்தினார். இலங்கை அரசாங்கம் முன்னெடுத்திருக்கும் திட்டங்களைப் பாராட்டிய இந்தோனேசியத் தூதுவர், இரு நாடுகளுக்கும் இடையிலான நல்லுறவை மேலும் வலுப்படுத்தும் வகையில் இணைந்து செயற்பட ஆவலுடன் இருப்பதாகவும் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் இலங்கை இந்தோனேசிய நாடாளுமன்ற நட்புறவுச் சங்கத்தை விரைவில் அமைப்பது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இதேவேளை, இலங்கைக்கான இந்தோனேசியத் தூதுவர் திவி குஸ்டினா டொபிங் (Dewi Gustina Tobing) பிரதி சபாநாயகர் (வைத்தியர்) ரிஸ்வி சாலியையும் நாடாளுமன்றத்தில் சந்தித்திருந்தார். இச்சந்திப்பில், விவசாயம், போக்குவரத்து, சுற்றுலா மற்றும் கலாசாரம் உள்ளிட்ட துறைகளில் இருநாடுகளுக்கும் இடையிலான தொடர்புகளை வலுப்படுத்துவது கலந்துரையாடப்பட்டது.

# மக்களும் செயற்பாட்டாளர்களும் ஒடுக்கப்பட பயங்கரவாத வரைவிலக்கணம் வழிவகுக்கிறது

## கலாநிதி ஜயம்பதி விக்ரமரத்ன தெரிவிப்பு

பயங்கரவாதம் என்ற சொல்லுக்கு பரந்துபட்ட வரைவிலக்கணம் வழங்கப்படுவதானது நாட்டு மக்களும் செயற்பாட்டாளர்களும் அரசினால் மீறல்களுக்கு உள்ளாக்கப்படுவதற்கு இடமளிப்பதுடன் விமர்சனங்கள் ஒடுக்கப்படுவதற்கும் வழிவகுக்கும் என கலாநிதி ஜயம்பதி விக்ரமரத்ன எச்சரித்துள்ளார்.

ஆளும்தரப்பு புதிய பயங்கரவாத எதிர்ப்புச்சட்டத்தின் ஊடாக நீண்டகாலமாக கடும்விமர்சனங்களுக்கும், எதிர்ப்புக்களுக்கும் உள்ளாகியிருக்கும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தைப் பதிலீடு செய்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டுவரும் நிலையிலேயே அரசமைப்பு விவகாரங்களில் நிபுணத்துவம் வாய்ந்தவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான ஜயம்பதி விக்ரமரத்ன மேற்கண்டவாறு எச்சரித்துள்ளார்.

குறித்தவொரு செயற்பாடு பயங்கரவாதம் என்பதற்கான வரைவிலக்கணத்தினுள் உள்ளடக்கப்படவேண்டுமாயின், அது மிகப்பயங்கரமானதொரு நடவடிக்கையுடன் தொடர்புடையதாகவோ அல்லது மிதமிஞ்சிய அச்சுறுத்தலை ஏற்படுத்தக்கூடியதாகவோ அல்லது தமது இலக்குகளை அடைந்துகொள்வதற்காக மேற்குறிப்பிட்ட இரண்டு கூறுகளையும் உபயோகிக்கக்கூடிய தனிநபரினதோ, அமைப்பினதோ நோக்கத்தை அடைவதை முன்னிறுத்தி அர்ப்பணிப்புடன் முன்னெடுக்கப்படும் நடவடிக்கையாகவோ இருக்கவேண்டும்.

பயங்கரவாதத்துடன் தொடர்புடைய சில செயற்பாடுகள் வன்முறையற்றதாக அமையக்கூடும். தீவிரவாத அமைப்பின் உறுப்பினர் ஒருவர் அவ்வமைப்பின் இலக்கை அடைந்துகொள்ளும் நோக்கில் இலத்திரனியல் உபகரணங்கள், கணினிக் கட்டமைப்புக்கள் போன்றவற்றை யாரும் அறியாதவண்ணம் மறைத்து வைத்திருத்தல் போன்ற செயற்பாடுகளை இதற்கு உதாரணமாகக்குறிப்பிடமுடியும். இருப்பினும் சிலரது செயற்பாடுகளில் வன்முறையின் கூறுகள் தென்படினும், அவற்றைப் பயங்கரவாத எதிர்ப்புச்சட்டங்களின் ஊடாகக் கையாளக்கூடாது.

அதுமாத்திரமன்றி, காலிமுகத்திடல் அரகலய போராட்டத்தின்போது பதிவான சில நடவடிக்கைகளை சிலர் பயங்கரவாத செயற்பாடு எனக் கூறலாம். ஆனால் அங்கு பதிவானசில நடவடிக்கைகள் முற்றுமுழுதாக அமைதியான முறையில் இடம்பெற்றவை அல்ல எனினும், அவற்றைப் பயங்கரவாத செயற்பாடாக வகைப்படுத்தமுடியாது.

போராட்டக்காரர்கள் மீதான தாக்குதல்களை அடுத்து தீவிரமடைந்த வன்முறைகள், அவற்றின் விளைவாக நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கொல்லப்பட்டமைமற்றும்அரசியல்வாதிகளின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டமை என்பன பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழன்றி, பொதுச்சட்டத்தின் கீழேயே கையாளப்படவேண்டும் என்றும் ஜயம்பதி விக்ரமரத்ன வலியுறுத்தியுள்ளார்.

# கொழும்புத் திட்டம் தொடர்பில் அமைச்சர் விஜித ஹேரத் ஆய்வு

அயலுறவுத்துறை அமைச்சர் விஜித்த ஹேரத் மற்றும் கொழும்புத் திட்டத்தின் செயலாளர் நாயகம் கலாநிதி பெஞ்சமின் பி.ரேய்ஸ் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு நேற்று அயலுறவுத்துறை அமைச்சில் நடைபெற்றது.

இச்சந்திப்பின்போது கொழும்புத் திட்டத்தின் உறுப்பு நாடுகள் மத்தியில் நிலைமாற்றமடைந்துவரும் தேவைப்பாடுகளை ஈடுசெய்யக்கூடியவகையில் கொழும்புத்திட்டத்தின் ஊடாக முன்னுரிமை வழங்கப்படவேண்டிய விடயங்கள் குறித்துக் கலந்துரையாடப்பட்டது.

அத்தோடு கொழும்புத் திட்டத்தின்கீழ் தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் செயற்திட்டங்கள் தொடர்பிலும் இதன்போது கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

அதேவேளை இச்சந்திப்பில் கருத்து வெளியிட்ட அயலுறவுத்துறை அமைச்சர் விஜித்த ஹேரத், 'கொழும்புத்திட்டத்தின் ஸ்தாபக உறுப்பினராகவும், சுமார் ஏழு தசாப்தங்களாக அதன் செயலகத்தை நிர்வகிக்கும் நாடாகவும் இருப்பதனையிட்டு இலங்கை பெருமையடைகிறது. இது சகலரையும் உள்ளடக்கிய அபிவிருத்தி, பிராந்திய ஒத்துழைப்பு மற்றும் சுபீட்சம் என்பவற்றை அடைந்துகொள்வதில் நாம் கொண்டிருக்கும் ஆழமான கடப்பாட்டைக் காண்பிக்கிறது' எனத் தெரிவித்தார்.

அத்தோடு இலங்கை உள்ளடங்கலாக சகல உறுப்புநாடுகளும் பயனடையக் கூடியவகையில் கொழும்புத்திட்டத்தின் ஆதரவுடன் முன்னெடுக்கப்பட்டுவரும் இயலுமை மேம்பாடு, போதைப்பொருள் ஒழிப்பு ஆலோசனை சேவை மற்றும் ஏனைய அபிவிருத்தித்திட்டங்கள் தொடர்பில் அமைச்சர் விஜித்த ஹேரத் தனது பாராட்டையும் வெளிப்படுத்தினார்





காலைக்கதிர் Kalaikkathir

# தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனத்தை தனியார் மயப்படுத்துவதற்கு முழு எதிர்ப்பு

மகாபொல நிதியத்திற்குச் சொந்தமான இலங்கை தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனத்தை முழுமையான தனியார் நிறுவனமாக மாற்றுவது சட்டவிரோதமானது என்றும், அதனை மகாபொல நிதியத்தினால் நிர்வகிக்கும் நிறுவனமாக மாற்றுவதற்குத் தேவையான சட்டரீதியான நடவடிக்கையை எடுக்குமாறு ஆளும்தரப்பு பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (கோப் குழு) அறிவுறுத்தியது.

இதற்குத் தேவையான எதிர்கால நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு ஆளும்தரப்பு பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் நிஷாந்த சமரவீர, வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கே.ஈ.விமலேந்திர ராஜா மற்றும் மகாபொல நம்பிக்கை நிதியத்தின் தலைவர் முன்னாள் உயர்நீதிமன்ற நீதியரசர் விஜித மலல்கொட ஆகியோருக்கு அறிவுறுத்தினார்.

லலித் அத்துலத்முதலி மகாபொல புலமைப்பரிசில் நம்பிக்கைநிதியத்தின் 2022 மற்றும் 2023 ஆண்டுகளுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை மற்றும் தற்போதைய செயலாற்றுகை குறித்து கடந்த வாரம் கோப் குழுவில் ஆராயப்பட்டபோதே இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

2015ஆம் ஆண்டு அமைச்சரவை தீர்மானத்திற்கு அமைய ஏற்படுத்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில் அப்போதிருந்த அமைச்சரின் ஒப்புதலுடன் குறித்த சொத்து கையகப்படுத்தப்பட்டமை சட்டவிரோதமானது என்பது குறித்து இங்கு நீண்டநேரம் கலந்துரையாடப்பட்டது.

இதற்காக 408 மில்லியன் ரூபா எஸ்.எல்.ஐ.ஐ.டி நிறுவனத்தினால் மகாபொல நிதியத்திற்கு வழங்கப்பட்டிருப்பதாகவும், நிதியத்திற்குச் சொந்தமான நிறுவனத்தினால் நிதியத்திற்கு இவ்வாறு நிதியை வழங்கி உரிமையைப் பெற்றுக்கொள்வது பிரச்சினைக்குரியது என்றும் கோப் குழுவின் உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர்.

இதற்கமைய இதில் தவறிழைத்தவர்களுக்கு உரிய தண்டனை வழங்கப்பட வேண்டும் என்றும், எதிர்காலத்தில் இதுபோன்ற சட்டவிரோத அல்லது மோசடியான செயற்பாடுகள் இடம்பெறாது தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்றும் கோப் குழுவின் தலைவல் வலியுறுத்தினார்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த பதவி ரீதியாக நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்க, இதுபோன்ற மோசடிகள் மூடிமறைக்கப்படுவதற்கு இடங்கொடுக்கப் போவதிலலையென்றும், எதிர்காலத்தில் விசாரணைகள் நடத்தப்படும் என்றும் கூறினார்.

நேர்மையான நோக்கத்திற்காக அரசாங்க நிறுவனமாக ஆரம்பக்கப்பட்ட இந்நிறுவனம் பணிப்பாளர் சபையில் பதவி அடிப்படையில் நியமிக்கப்படும் அரசாங்க அதிகாரிகள் பணியாற்றியதாகவும், காலப்போக்கில் பாரிய அளவில் இலாபமீட்டும் இடமாக இனங்காணப்பட்டதால் ஏற்பட்ட பேராசை காரணமாக இவ்வாறு சட்டரீதியற்ற வகையில் அரசாங்கத்திடமிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அப்போது இந்நிறுவனத்தை மாற்றுவதற்கு எதிர்த்த அதிகாரியொருவர் குழுவில் தெரிவித்தார்.

இந்த விசாரணைகள் மூலம் அதிக எண்ணிக்கையிலான மாணவர்கள் படிக்கும் ஒரு பல்கலைக்கழகம் வீழ்ச்சியடையக்கூடும் என்ற தவறான எண்ணத்தை உருவாக்க சிலர் முயற்சிக்கலாம் என்பது குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது. எனினும், எஸ்.எல்.ஐ.ஐ.டி. நிறுவனத்தை அப்படியே பராமரிக்க வேண்டும் என்றும், அதன் பொறுப்பை மகாபொல நிதியத்திடம் ஒப்படைக்க வேண்டும் என்றும், இதன் மூலம், அதிகமான மாணவர்கள் மானிய விலையில் பட்டப்படிப்புகளைத் தொடர வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

முன்னைய அரசாங்கத்தின் காலத்தில், உள்ளகக் கணக்காய்வாளர் உள்ளிட்ட முக்கியமான பதவிகளில் காணப்பட்ட வெற்றிடங்கள் முறையாக நிரப்பப்படவில்லை என்பது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது. இவ்வளவு பெரிய தொகையை கையாளும் ஒரு நிறுவனத்தின் ஊழியர்களை முறையாக நிரப்பத் தவறியது அதன் செயல்திறனின் அடிப்படையில் ஒரு பெரிய பிரச்சினையாகும் என்றும் குழு சுட்டிக்காட்டியது.

மகாபொலநிதியத்தினால்நிர்வகிக்கப்படும்நிறுவனங்களான நஷனல் வெல்த் கோப்ரேஷன் லிமிடட் நிறுவனத்தால் கட்டுப்படுத்தப்படும்வரையறுக்கப்பட்டநாட்வெல்த்செக்யூரிட்டீஸ் லிமிடெட் ஆகியவற்றின் தற்போதைய நிலைமை குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

நட்டத்தில் இயங்கும் நிறுவனங்களில் நிதியை மீண்டும் முதலீடு செய்வது தொடர்பான பல சிக்கல்கள் இருப்பதால், இது தொடர்பாக தடயவியல் கணக்காய்வு நடத்தப்பட்டு மேலதிக நடவடிக்கைகளை முன்னெடுப்பது என்றும் இங்கு முடிவுசெய்யப்பட்டது.

பல்கலைக்கழகங்களுக்கு இணைத்துக்கொள்ளும் மற்றும் புலமைப்பரிசில் ஒன்றைப் பெறுவதற்கு தகைமையான அதிகளவான மாணவர்களுக்கு மகாபொல புலமைப்பரிசில் வழங்குவதற்கான இயலுமை தொடர்பில் குழுவில் கவனம் செலுத்தப்பட்டது.

மூலதனமாகக் காணப்படும் சுமார் 20 பில்லியன் ரூபாய் அளவிலான நிதியின் மூலம் கிடைக்கும் வட்டி மற்றும் ஏனைய வருமானங்களை முகாமை செய்து உயர்ந்தளவு நியாயமாக செயற்படுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக நிதியத்தின் தலைவர் குறிப்பிட்டார்.

இதற்கு மேலதிகமாக 2023 இல் ஒப்பந்த அடிப்படையில் 2 வருடங்களுக்கு வர்த்தக கண்காட்சி உத்தியோகத்தர்களை நியமித்தல், நிகழ்நிலை சீட்டிழுப்புக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட சீட்டிழுப்பாளர் அதிலிருந்து விலகியமை காரணமாக நிதியத்துக்கு 750 மில்லியன் ரூபாய் நட்டம் ஏற்பட்டமை போன்ற விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டதுடன் அது தொடர்பில் தடயவியல் கணக்காய்வு நடாத்தி தேவையான நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு குழு அறிவுறுத்தல் வழங்கியது.



# 68 சூட்டு சம்பவங்களில் 37 பேர் சாவு வருடத்தின் 6 மாதங்களில் மட்டும்

இந்தவருடத்தின்இதுவரையான காலப்பகுதியில் நாடளாவிய ரீதியில் 68 துப்பாக்கிச்சூட்டு சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இதன்போது 37 பேர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதுடன் 39 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்தத் துப்பாக்கிச்சூட்டு சம்பவங்களுடன் தொடர்புடையதாக கூறப்படும் 24 துப்பாக்கிதாரிகள் உள்ளிட்ட 150 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளாரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உதயகுமார வுட்லர் தெரிவித்தார்.

கொழும்பில்நேற்றுஇடம்பெற்ற விசேட செய்தியாளர்கள் சந்திப்பின்போதே பொலிஸ் பேச்சாளர் இந்தத் தகவல்களை வெளிப்படுத்தியிருந்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த வருடத்தின் ஜனவரி 1 முதல்ஜூலை 13 (நேற்றுமுன்தினம்) வரையான காலப்பகுதிக்குள் நாடளாவிய ரீதியில் 68 துப்பாக்கிச்சூட்டு சம்பவங்கள் பதிவாகியுள்ளன. குறித்த துப்பாக்கிப்பிரயோகங்களில் 50 திட்மிட்டக்குற்றச்செயல்களுடன் தொடர்புடையவையாகும். ஏனைய 18 துப்பாக்கிச்சூட்டு சம்பவங்களும் தனிப்பட்ட காரணங்களால் இடம் பெற்றவையாகும்.

இந்ததுப்பாக்கிச்சூட்டுசம்பவங்களில் 37 பேர் உயிரிழந்துள்ளதுடன் அவர்களில் 34 பேர் திட்டமிட்ட குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்களாவர். மேலும் 39 பேர் காயமடைந்துள்ளதுடன் அவர்களில் 30 பேர் திட்டமிட்டக்குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர்களாவர்.

எவ்வாறாயினும் இந்த பாதாள உலகக்குழுக்களின்செயற்பாடுகளை கட்டுப்படுத்தும் நோக்கில் பதில் பொலிஸ் மா அதிபரின் பணிப்புரைக்கு அமைய இந்த நாட்களில் பொலிஸார் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மற்றும் முப்படையினர் இணைந்து விசேட சுற்றிவளைப்புகள் மற்றும் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதற்கமைய ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் ஜூலை மாதம் 10 ஆம் திகதி முதல் வரையான காலப்பகுதியில் 23 ரி-56 ரக துப்பாக்கிகள் 46 கைத்துப்பாக்கிகள் 30 ரிவோல்வர் ரக துப்பாக்கிகள் உட்பட உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தயாரிக்கப்பட்ட 1165 துப்பாக்கிகளும்மீட்கப்பட்டுள்ளன.

மேலும் இந்ததுப்பாக்கிச்சூட்டு சம்பவங்களுடன் தொடர்புடையதாக கூறப்படும் 24 துப்பாக்கிதாரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். 15மோட்டார் சைக்கிள் ஓட்டுனர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். குறித்த துப்பாக்கிப்பிரயோகங்களுக்கு உதவி ஒத்தாசை வழங்கிய குற்றச்சாட்டில் 150 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றார்.

# ஆமி சலிந்த கைது தொடர்பில் ராஜந்திரத் தகவல்கள் இல்லை

## பொலிஸார் தெரிவிப்பு

பல்வேறு திட்டமிட்டக் குற்றச்செயல்களுடன் தொடர்புடையதாக கூறப்படும் கேல்பத்தர பத்மே மற்றும் ஆமி சலிந்த உள்ளிட்ட சிலர் மலேசியாவில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று இதுவரை இராஜதந்திர ரீதியிலான எந்தவித தகவல்களும் பாதுகாப்புப் பிரிவுக்கு கிடைக்கப்பெறவில்லை என சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உதயகுமார வுட்லர் தெரிவித்தார்.

ஏற்கனவே மலோசியாவில் கைது செய்யப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்தப்பட்ட 26 சந்தேக நபர்கள் தொடர்பில் ஆராய பொலிஸ் குழுக்கள் மலோசியா மற்றும் தாய்லாந்துக்கு சென்றுள்ளதாக தெரிவித்த அவர் குறித்த பெயர் பட்டியலில் கேல்பத்தர பத்மே மற்றும் கமாண்டோ சலிந்த ஆகியோரின் பெயர்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை என குறிப்பிட்டார்.

சஞ்சீவ குமார சமர ரத்ன என்னும் கனேமுல்ல சஞ்சீவ படுகொலை செய்யப்பட்டமை உள்ளிட்ட பல குற்றச் செயல்களுடன் நேரடியாக தொடர்புடையவர் என குற்றஞ்சாட்டப்பட்டு சர்வதேச சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள மனுதின பத்மசிரி பெரேரா என்னும் கேல்பத்தர பத்மே கமாண்டோ சலிந்த உள்ளிட்ட சிலர் அண்மையில் மலேசியாவில் வைத்து அந்நாட்டு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியிருந்தன.

இந்த விடயம் தொடர்பில் திங்கட்கிழமை (14) கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பொலிஸ் ஊடகப்பேச்சாளரிடம் கேள்வி எழுப்பினர். இதற்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களில் இடம்பெற்றதாகக்கூறப்படும் குற்றச்செயல்கள் தொடர்பில் தற்போது குற்றப்புலனாய்வுத் திணைக்களம் விசேட விசாரணைகளை ஆரம்பித்திருந்தது. இந்நிலையில் திட்டமிட்டக் குற்றச்செயல்களுடன் தொடர்புடையதாக கூறப்படும் இலங்கைச் சேர்ந்த இருவர் மலேசியாவில் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர்களின் அடையாளத்தை உறுதிப்படுத்த ஒத்துழைப்பு வழங்குமாறும் கடந்த 11 ஆம் திகதி மலேசிய பாதுகாப்பு பிரிவினரால் குற்றப்புலனாய்வுத்திணைக்களத்துக்கு அறிவிக்கப்பட்டது.

இதற்கமைய அவர்களில் 20 வயதுடைய ஒருவர் தற்போது அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் மலோசியாவின் குடிவரவு குடியகல்வு சட்டத்துக்கு ஏற்ப சந்தேகநபரை நாட்டுக்கு அழைத்து வர உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மேலும் பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடையதாக கூறப்படும் 29 பேருடைய பெயர் பட்டியலை மலேசியா பொலிஸார் எமக்கு அனுப்பியுள்ளனர். இவர்கள் ஏதேனும் குற்றச் செயல்களுடன் தொடர்புபட்டுள்ளார்களா என்பது தொடர்பில் குற்றப்புலனாய்வு திணைக்களம்,

அரசபுலனாய்வு பிரிவு மற்றும் குற்றச்செயல்களை பதிவு செய்யும் பிரிவு ஆகியன விசாரணைகளை ஆரம்பித்துள்ளன. இதன் ஊடாக கிடைக்கப்பெறும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும். மேலும் குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் இரு விசாரணை குழுக்கள் மலேசியா மற்றும் தாய்லாந்துக்கு அனுப்பட்டுள்ளன.

இந்த நாட்களில் பல்வேறு திட்டமிட்டக் குற்றச் செயல்களுடன் தொடர்புடையதாக கூறப்படும் கேல்பத்தர பத்மே மற்றும் கமென்டோ சலிந்த உள்ளிட்ட சிலர் மலேசியாவில் கைது செய்யப்பட்டுள்ளதாக சமூக வலைத்தளங்களில் செய்திகள் பகிரப்பட்டு வருகின்றன. எனினும் சர்வதேச பொலிஸார் இவ்விடயம் தொடர்பான எவ்வித உறுதிப்படுத்தப்பட்ட தகவல்களையும் வழங்கவில்லை என்றார்.









இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.07.2025இல் வெளியிடப்பெற்றது